**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி /நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**முன்னிலை : செல்வி. G.பவித்ரா, L.L.M.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்கரன்கோவில்.**

**நீதித்துறை நடுவர், சங்கரன்கோவில் (மு.கூ.பொ)**

**2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 05-ம் தேதி வியாழக்கிழமை**

**Cr.M.P.No. 283/2026**

திருவேங்கடம் காவல் நிலைய குற்ற எண். 35/2026

மனு நாள் 27.02.2026 பிரிவு 497 பி.என்.எஸ்.எஸ்.

குருசாமி,
த/பெ. அய்யனன்

.....மனுதாரர் / வாகன உரிமையாளர்

/எதிர்/

காவல்துறை ஆய்வாளர்,
திருவேங்கடம் காவல் நிலையம்

..... எதிர்மனுதாரர்

மனு மற்றும் வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. அரசு தரப்பில் பதில் பெறப்பட்டது.

மனுதாரர் தரப்பில், மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட வாகன எண். TN 79 H 4285 என்ற எண் கொண்ட TVS XL 100 Heavy Duty இருசக்கர வாகனத்தை மனுதாரர் கடந்த 7 வருடங்களுக்கு முன்பு அவரது பெயரில் மேற்படி வாகனத்தை TVS Store Room-ல் இருந்து கிரையம் மூலம் வாங்கி சொந்த உபயோகத்திற்கு பயன்படுத்தி வந்த நிலையில் இரு சக்கர வாகனத்தை எதிர்மனுதாரர் காவல் நிலையத்தினர் கைப்பற்றி குருவிகுளம் காவல் நிலைய குற்ற எண். 35/2026 பிரிவு 123 BNS r/w 24(1) Cotpa Act-ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, மேற்படி எதிரி நீதிமன்ற பிணையில் விடுவிக்கப்ட்டு விசாரணையில் இருந்து வருகிறது என்றும், மேற்படி மனுதாரரின் பெயரில் உள்ள வாகனத்தை அத்தாட்சியாக பதிவு செய்யப்பட்டு தொடர்ந்து காவல் நிலையத்தில் இருந்து வருகிறது என்றும், மேற்படி வாகனம் தொடர்ந்து காவல் நிலையத்தில் இருக்கும்பட்சத்தில் அவரது வாகனம் வெயிலிலும், மழையிலும் நனைந்து துருப்பிடித்து பயன்படுத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும் என்றும், மேற்படி வாகனத்தை வைத்து மனுதாரர் விவசாயம் செய்து பிழைப்பு நடத்தி வருவதாகவும், விவசாய தேவைக்கோ, மருத்துவமனைக்கோ இரு சக்கர வாகனம் இல்லாமல் எந்தவொரு வேலைக்கும் செல்ல தனது இரு சக்கர வாகனம் அவசியமாக தேவைப்படுகிறது என்றும், மேற்படி இருசக்கர வாகனத்தை தன்னிடம் ஒப்படைக்காதபட்சத்தில் பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடும் என்பதாலும், மேற்படி வாகனத்தை நீதிமன்ற பிணையில் பெற்று சென்ற பின்பு அதை உருமாற்றம் செய்யவோ, விற்பனை செய்யவோ மாட்டேன் என்றும், மேலும், மனுதாரர் தரப்பில் கூடுதல் அபிடவிட் தாக்கல் செய்யப்பட்டு, அதில் மனுதாரரின் மனைவி அவருடைய அனுமதியின்பேரில் இருசக்கர வாகனத்தை எடுத்துச் சென்றதாக

தெரிவித்துள்ளதாகவும், எனவே, மேற்படி வாகனத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்க வேண்டுமென்றும், ஒப்படைவு செய்ய வேண்டி வாதிடப்பட்டது.

எதிர்மனுதாரர்/அரசு தரப்பில், திருவேங்கடம் காவல் நிலைய குற்ற எண். 35/2026 வழக்கின் எதிரி உரிமையாளர் என்றும், மேற்படி வழக்கின் சொத்தை நீதிமன்றத்தில் ஒப்பைடைக்க தயாராக உள்ளதாகவும், மேற்படி வழக்கின் சொத்தை உரிமையாளரிடம் ஒப்படைக்கும்பட்சத்தில் வழக்கின் விசாரணைக்கு ஆஜர்படுத்தாமல் விற்கக்கூடும் என்பதாலும், உருமாற்றம் செய்யக்கூடும என்பதாலும், பெயர் மாற்றம் செய்யக்கூடும் என்பதாலும், மேற்படி வழக்கின் சொத்தை உரிமையாளரிடம் ஒப்படைக்க கடுமையான ஆட்சேபனை செய்வதாகவும், மேலும், இவ்வழக்கின் சொத்தை மேல்நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. பி.ஆர்.எண்.141/2026-ல் கண்ட சொத்தான. TN 79 H 4285 என்ற எண் கொண்ட TVS XL 100 Heavy Duty இருசக்கர வாகனம் மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்பதை எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபிக்கவில்லை என்பதைக் கருத்தில் கொண்டும், அதற்கான ஆவணங்களை மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்திருப்பதாலும், மேற்படி வாகனம் நீதிமன்ற காவலில் இயக்கப்படாமல் இருந்தால் பழுதாகிவிடும் என்று மனுதாரர் வாதம் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் இருப்பதாலும், மேற்படி மனுதாரர் தரப்பில் இவ்வழக்கின் எதிரி தனது மனைவி என்று தெரிவித்து கூடுதல் அபிடவிட் தாக்கல் செய்துள்ளதைக் கருத்தில் கொண்டும், மேற்படி வாகனத்தின் மீது பறிமுதல் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்படாததைக் கருத்தில் கொண்டும், மேற்படி வாகனத்தை கீழ்க்கண்ட நிபந்தனையின் பேரில் மனுதாரரிடம் இடைக்காலமாக ஒப்படைக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

<u>நிபந்தனைகள் :</u>

1. மனுதாரர் தானும், தனக்காக இரு நபர்களும் தலா ரூ.65,000/-க்கு பிணைமுறி எழுதிக் கொடுக்க வேண்டும்.
2. வாகனத்தின் அசல் ஆர்.சி.புத்தகத்தை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வேண்டும்.
3. வாகனத்தை விற்கவோ, உருமாற்றம் செய்யவோ கூடாது.
4. நீதிமன்றம் உத்தரவிடும் நாளிலும், விசாரணையின்போதும் வாகனத்தை தவறாது நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும்.
5. COTPA சட்டத்தின் கீழ் பறிமுதல் நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எடுக்கும்பொருட்டு வாகனத்தை கோரும்போது அதை ஆஜர்படுத்துவதாக தெரிவித்து மனுதாரர் பொறுப்பேற்பு கடிதம் (Letter of undertaking) எழுதிக் கொடுக்க வேண்டும்.
6. வாகனத்தின் நான்கு புறங்களையும் புகைப்படம் எடுத்து புகைப்படத்தையும் அதற்கான சி.டியையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

7. பஞ்சநாமா தயாரித்து வழக்கு கோப்புடன் இணைத்து வைக்க வேண்டும்.

மைஷ நிபந்தனைகளின் கீழ் பி.ஆர்.எண் 141/2026 ல் கண்ட TN 79 H 4285 என்ற எண் கொண்ட TVS XL 100 Heavy Duty இருசக்கர வாகனத்தை மனுதாரர் வசம் இடைக்காலமாக ஒப்படைவு செய்து உத்தரவிடப்படுகிறது.

PAVITHRA G
Digitally signed by PAVITHRA G
Date: 2026.03.05 17:44:01 +0530

நீதித்துறை நடுவர், (மு.கூ.பொ),

சங்கரன்கோவில்.